**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 6 June 2017

# புதிய பெற்றோர்கள் குழந்தைகளைப் பராமரிக்க உதவும் செயலி

புதிதாகப் பிறந்த குழந்தையைப் பராமரிக்க வழிகாட்டும் கைபேசி செயலியைப் பெற்றோர்கள் கூடிய விரைவில் பயன்படுத்தத் தொடங்கலாம். மருத்துவமனையின் பேறுகாலத் தாதியர், சிகிச்சையாளர்கள், பல்கலைக்கழக ஆய்வாளர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் இந்தச் செயலி சிங்கப்பூரில் உருவாக்கப்படுகிறது.

சொந்தமாகக் குழந்தையைப் பராமரிக்கப் போதிய தன்னம்பிக்கை இல்லாமல், மன உளைச்சலுக்கு உள்ளாகும் புதிய பெற்றோருக்குப் பேறுகாலத்திற்குப் பிந்திய பராமரிப்பு விவரமளிப்பது செயலியின் நோக்கம். "ஹோம் பட் நாட் அலோன்" என்றழைக்கப்படும் செயலி இலவசமாக வழங்கத் திட்டமிடப்படுகிறது.

தாய்ப்பால் ஊட்டுதல் முதல் குழந்தையைக் குளிப்பாட்டுதல் வரையிலான பல்வேறு தலைப்புகளில் விளக்கப்படங்கள், காணொளிகள், ஒலிப்பதிவுகள் போன்றவை செயலியில் கிடைக்கும்.

பெற்றோரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், குழந்தை பராமரிப்பு பற்றிய கட்டுக்கதைகளுக்கு விளக்கமளிக்கவும் செயலி முயலும்.



உதவி பேராசிரியர் ஷெஃபாலி ஷொரே பெற்றோர்களுக்கு புதிய செயலி குறித்து விளக்கமளிக்கிறார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் யொங் லூ லின் மருத்துவப் பள்ளியையும் தேசியப் பல்கலைக்கழக மருத்துவமனையையும் சேர்ந்த ஆய்வுக் குழுவினர் செயலியை உருவாக்குகின்றனர். தேசியப் பல்கலைக்கழகத்தின் ஆலிஸ் லீ தாதிமைக் கல்வி நிலையத்தைச் சேர்ந்த உதவி பேராசிரியர் ஷெஃபாலி ஷொரே ஆய்வுக் குழுவை வழிநடத்துகிறார்.

பிரசவத்திற்குப் பிறகு மருத்துவமனையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிச் செல்லும் பெற்றோர்கள் பலரும் உளைச்சலுக்கு இலக்காவதாக உதவி பேராசிரியர் ஷொரே நேற்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

"குறிப்பாக, மருத்துவமனையில் தங்கியிருந்த குறுகிய காலத்திற்குள் சுகாதாரப் பராமரிப்புத் துறையினர் அளித்த ஏகப்பட்ட விவரங்களால் புதிய பெற்றோர்கள் திக்குமுக்காடிப் போகக்கூடும். அந்த விவரங்களை நினைவில் கொள்வதும் சிலருக்குச் சிரமமாக இருக்கும்," என்றார் அவர்.

எனவே, பிரசவத்திற்குப் பிந்திய பராமரிப்பு விவரங்களை வழங்கி, உளைச்சலைத் தணிப்பது செயலியின் நோக்கம்.

புதிய செயலி 2015 டிசம்பர் முதல் 2016 மே வரை ஆறு மாத காலம் முன்னோட்டமாகச் சோதிக்கப்பட்டது. சுமார் 126 பேர், அல்லது 63 தம்பதிகள், சோதனைக் கால கட்டத்தின்போது செயலி மூலம் ஆதரவு பெற்றனர். பிற்பாடு, கட்டுப்படுத்தப்பட்ட பிரிவிலிருந்த 62 தம்பதியருடன் இந்தத் தம்பதியர் ஒப்பிடப்பட்டனர்.

கட்டுப்படுத்தப்பட்ட பிரிவில் இருந்த பெற்றோருக்கு மருத்துவமனை வழக்கமான மகப்பேறு பராமரிப்பு வழங்கியது.

செயலியைப் பயன்படுத்திய பெற்றோர்கள் நான்கு வாரத்திற்குப் பிறகு ஆய்வு செய்யப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் அதிக தன்னம்பிக்கையுடன் குழந்தைகளைப் பராமரித்தனர்.

இந்தச் செயலியை மருத்துவமனைகளில் சோதனை செய்த பிறகு பொதுமக்களிடம் அறிமுகப்படுத்த குழு திட்டமிடுகிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.